ஓய்வூதியச் சுற்றுநிருபம் இல : 09/2015(i)

எனது இல : ஓவூ/சுற்றுநிருபம்/2016
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு-10.
2016.02.08

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளினது பிரதம செயலாளர்கள்,
உள்ளூர் ஆட்சிமன்றத் தலைவர்கள் / திணைக்களத்தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் / முற்படைத்தளபதிகள்,
பிரதேச செயலாளர்களுக்கும்,

<u>மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகள், திணைக்களம் மூலமாக வழங்கும் நடவடிக்கையினை ஆரம்பித்தல்.</u>

என்னால் வெளியிடப்பட்ட 2015.09.14ஆந் திகதிய ஓய்வூதிய சுற்றுநிருபம் 9/.2015க்கு மேலதிகமாக.

அச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 04ஆவது பந்தி கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டியதுடன், நிறுவனம் மூலம் அனுப்பப்படும் P.D 06 மீளாய்வு விண்ணப்பப்படிவங்கள், ஓய்வூதியத் திணைக்களம் அங்கீகரிக்கப்பட்ட பின் அவ்விண்ணப்பங்களுக்கு அமைவாக உரிய நிறுவனங்களினால் மீளாய்வு, திறைசேரி 79 வழங்கப்படல் வேண்டும்.

அம்மீளாய்வு திறைசேரி 79இன் ஓய்வூதியப்பணிப்பாளர் நாயகத்துக்கான பிரதியை கூடிய விரையில் ஓய்வூதியத்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். அது கிடைக்கப்பெற்ற பின் மாத்திரம் மீளாய்வுக் கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியம் நேராக ஓய்வூதியரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அக் கொடுப்பனவுகளை இலகுபடுத்துவதற்கு நிறுவனத் தலைவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் செயற்படல் வேண்டும்.

01. மீளாய்வுப் பத்திரத்தை வழங்கும் போது உரிய உத்தியோகத்தரது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.

02. மீளாய்வு செய்யப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பம் செய்ய வேண்டிய திகதியை (மீளாய்வுக் குறிய சுற்று நிருபத்தின் பிரகாரம்) அளிப்புபத்திரத்தில் வேறாக குறிப்பிடல் வேண்டும். (ஓய்வுபெறும் திகதிக்கு முன்னால் அடைப்புக்குறிக்குல்)

03. வழங்கப்படுகின்ற அளிப்புப்பத்திரத்தில் மீளாய்வு அளிப்புபத்திரமெனவும், வழங்கப்படும் திகதியும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். (1வது மீளாய்வு 2016.01.01)

04. தற்போதைக்கு வங்கிக் கணக்கு இல்லாத ஓய்வூதியர் சம்பந்தமாக கீழ்க்குறிப்பிடப்படும் விதத்தில் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். அதாவது இம்மீளாய்வு ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவு நேராக வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்படுவதால், ஓய்வூதியரின் பெயரிலுள்ள தனிநபர் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி இவ்வளிப்புப்பத்திரத்துடன் எமக்குச் சமர்ப்பிப்பது கட்டாயமாகும்.

எஸ்.எஸ். ஹெட்டியாரச்சி,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. பிரதமமந்திரியின் செயலாளர்
03. செயலாளர் – பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
04. செயலாளர் – நிதி அமைச்சு
05. கணக்காய்வாளர் நாயகம் - உரிய நடவடிக்கைக்காக